சாட்சிகள் வாக்குமூலம்
பாகம் 111 சுற்றறிக்கை உத்தரவு 2(11) உவிமுச பிரிவு 1 மற்றும் 2
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
அ.வ.எண்.125/2021

வாக்குமூலம்: வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தங்கராஜ் | த/பெ. | : கருப்புச்சாமி கவுண்டர் |
| கிராமம் | : | வேலை | : |
| வட்டம் | : | வயது | : |
| மாவட்டம் | : | நாள் | : 16.10.2023 |

1973ம் வருடத்திய வரைமுறைச் சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்ஙனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2023ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16–ம் நாள் அளித்த சாட்சியம்.

<u>முதல் விசாரணை:</u> என்னுடைய முதல் விசாரணையை சத்தியப்பிரமான நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். முதல் நிரூபண பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விசயங்கள் எல்லாம் என்னால் சொல்லப்பட்டவைதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான்தான் அதில் கையெழுத்து செய்துள்ளேன். 23.08.1972ம் தேதியிட்ட ராமாயி அம்மாள் என்ற ராமாத்தாள் அவர்களின் கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1. 08.06.2005ம் தேதியிட்ட எனது முன் பாத்தியஸ்தர் கதிரேசன் அவர்களின் தான செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2. 24.09.2009ம் தேதியிட்ட எனது கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3. எனது பெயரில் உள்ள கணினி சிட்டா கணினி நகல் வா.சா.ஆ.4. 01.04.2011ம் தேதியிட்ட எனது பெயரில் உள்ள தீர்வை அசல் வா.சா.ஆ.5. எனது மாதிரி வரைபடம் அசல் வா.சா.ஆ.6 ஆகியவை தாக்கல் செய்கிறேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(குறுக்கு விசாரணைக்காக வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது)

N GNANASAMBANDAM
Digitally signed by N GNANASAMBANDAM
Date: 2023.10.16 16:31:50 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.